# தலைவர்கள் வருகை மெட்ரோ ரயிலில் 2.41 லட்சம் பேர் பயணம்

சென்னை, அக். 14: மோடி-ஜின்பிங் வந்த நாளில் சென்னை மெட்ரோ ரயிலில் 2.41 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சீன அதிபர் ஜின்பிங் மற்றும் பிரதமர் மோடி கடந்த 11 மற்றும் 12ம் தேதியில் மாமல்லபுரத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதனால், சென்னையில் பல்வேறு இடங்களில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இதனால் மக்கள் பஸ், மின்சாரரயில், கார், பஸ்களை விடுத்து மெட்ரோ ரயிலுக்கு மாறினர்.

அதன்படி, கடந்த 11ம் தேதி 1 லட்சத்து 37 ஆயிரத்து 820 பேரும், 12ம் தேதி 1 லட்சத்து 3 ஆயிரத்து 583 பேரும் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தியுள்ளனர். இந்த இரண்டு நாளில் மட்டும் 2 லட்சத்து 41 ஆயிரத்து 403 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளதாக நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

வழக்கமாக ஒரு நாளில் 80 முதல் 90 ஆயிரம் பேர் மட்டும் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்துவது வழக்கம். ஆனால், 11 மற்றும் 12ம் தேதியில் மெட்ரோ ரயில் சேவையை பொதுமக்கள் பயன்படுத்தியுள்ளனர்.